உ

சிவமயம்.

# திருவாரூர்ப் பன்மணிமாலை.

12638

இஃது
இலக்கணவிளக்கம், நல்லூர்ப் புராண
முதலியவை யியற்றிய
திருவாரூர்
வைத்தியநாத தேசிகராற்
செய்யப்பெற்றது.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 0

சென்னை
சுதேசமித்திரன் ஸ்டீம் பிரஸில் அச்சிடப்பட்டது.
1913.

*All rights Reserved.*

விலை அணா 2.] [தபாற்கூலி வேறு.

உ

சிவமயம்.

# முகவுரை.

திருவாரூர்ப் பன்மணிமாலையானது மூலாதார க்ஷேத்திரமானதும், சப்த விடங்க க்ஷேத்திரங்களில் முதன்மை பெற்றதும், மகாலெக்ஷுமியே ஸ்ரீ பரந்தாமனைக் கணவனாபடைய வழிபட்டஸ்தலமுமான நிறை செல்வத் திருவாரூரிற் புற்றிடங்கொண்டபிரான்மீதும், ஸ்ரீ கனகவசந்தத் தியாகேசன் மீதும், அவ்வூரில் பரம்பரைச் சைவ ஆசாரிய வமிசத்தி லுதித்தவரும், இலக்கணக் கொத்து இயற்றிய ஈசான தேசிகரெனச் சிறப்புப் பெயர் வாய்ந்த திருவாவடுதுறை யாதீனத்துச் சுவாமிநாத தேசிகரால், "........என் கண்காணத் திருவாரூரிற் சிறப்புற்றிலகும் வைத்திய நாதனிலக்கண விளக்கம் வகுத்துரை யெழுதினன்" என்று புகழ்ப்பெற்றவரும், பொம்மைய புரத்தாதிமூர்த்திகளான ஸ்ரீ சிவஞான பாலைய சித்த சுவாமிகளாலே சன்மானிக்கப்பட்டவரும், பல்லரசர்களாற் போற்றப்பட்டவருமான ஸ்ரீ வைத்தியநாத தேசிகராற் செய்யப்பட்டதென்பர். தலத்தின் மகிமையு, மியற்றியாரது பெருமையும், நூலினது நயமும் யாமெடுத்துக் கூறுதல் மிகையேயாம். இந்நூற்பிரதி இப்பொழுது கிடைப்பதரிதாகி விட்டமையால் கிடைத்த பிரதியைக்கொண்டு, அதுவும் செல்லிற்கிரையாகாவண்ணம் அச்சியற்ற முயன்றேன். பிழைமலிந்திருத் தலியல்பாகையான் அறிஞர் பொறுத்தருள்வதோடு, அன்புகூர்ந்து எமக் கறிவிக்கவேண்டுகிறேன்.

அதனிற் றடையுறுவண்ணம் தமக்குரிய அவகாச காலங்களிற் பரிசோதித்தல் முதலிய சகாயஞ் செய்த

சிவமயம்.

# திருவாரூர்ப் பன்மணிமாலை.

### காப்பு-வெண்பா

மின்மணி மாலையப்பொன் வீதியாரூர்ப் பெருமான்
பன்மணி மாலைப் பனுவற்கு—முன்மணி
மேய்ந்தவா தாவியுட லீறுசெய்தோன் குண்டிகைநீர்
சாய்த்த வாதாவி சரண்.

### நூல்—வெண்பா

பூமேவுநாபியான் காணாதபுண்டரிகந்
தாமேவுவாரை யென்று சார்குவேன்—நாமேவு
காவாரூர் வீதிவிடங்கார் சேரா துண்டமலர்க்
காவாரூர் வீதிவிடங் கா. க.

### கலித்துறை

காவாயெனச் சிறுதெய்வந்தனைந் தினங்
கைதொழுது
நாவாய் தழும்பப்புகழ்ந் தென்பயன்கதி
நாடின் மும்மைத்
தேவாயத் தேவுக்குங் கோவாய் மணிப்பொற்
சிங்காதனஞ் சேர்
பூவாய் மதிக்கண்ணி யாரூர்ப் பிரான்பதம்
போற்றுமினே. உ.

### விருத்தம்

மின்னெறித்த விரிசடைதாங்குமுன்
பன்னெறித் தவமாற்றிய பண்பினோர்
பொன்னெறித்த மெய்ப் புற்றிடங் கொண்டவர்க்
கென்னெறித் துணை யென்று தெளிவரே. ங.

### கலிநிலைத்துறை

தெளியாவுளத் தோடு மென்னாவி கண்ணீர்
தெளித்தோட முன்
குளியாத மெய்யுங் குளிக்கும் விறற்பாக
கோல் கொளுவாய்
தளியாயிரங் கொண்டவாரூர்ச் சேயூர்தி
தணியாவுளக்
களியாவுறவொடு மின்னோடு முன்னோடு
ஊர் காணிலே.

### கலிப்பா

நாணா ரயன்மால் கதிர்முடி காலா யிரமாங்
கோணா மறை பெருமை கூறுந் தரமன்றால்
நாணாமற் புன்றமிழால் நாமேபுகல வல்லேஞ்
சேணார் மதிலாரூர்த் தெய்வ சிகாமணியே

### விருத்தம்

மணிமுடி யிமையோர் தூவு மலர்மதுப்
பெருக்குவீ தித்
தணிமுடி நெடுந்தேராழித்
தலத்திடைத் தரிக்கு மாரூர்ப்
பணிமுடி யெந்தைபாதம்
பணிந்தெழுத் தைந்து மோதார்
பிணிமுடி யெழுபிறப்பும்
பிறந்திறந் துழலுவாரே.

உழலு மதிலுமவுணரு மொருநகை நொடியிலழிதர
அழலு நகைசெய்மறை முதலமலர்க் கமலைபணிபவர்
சுழலு மனமு மிலவொரு துரிசு மிலர்கண்மொய்தரு
நிழலுமலரு நுரை திரைநிறைகொள் கடலுமுடையரே.

உடையதளீசர் நடனவினோத ருமை யொருபாகர்வாழ்
கடைமணிமாட நிறையொளி வீசுகமலை யணிவீதிவா
யிடையிடு கூடை யட கதுகூறு மிவளொடு பேசவே
படைகுநராகி விலைகொடுசேர்வர் மூதுணர் வாளரே. அ.

ஆளாயமை யிமையோர் பணிபுரியுந் திருவாரூர்ச்
சூளா மணிப்பிறை யாகியமுடியா னடி தொழுதோர்
மீளாப்பிறவி யின்மீளினு மிளிர்பொன் முடியுறு பொற்
றாளார்பெறு வாழ்வார் வினைசார்வா ரவர்தாமே. ௯.

வெண்பா

தாமன்பு வைத்தநெறி சைவந் தபோதனர்போ
னேமம்பெறு நாளு மெய்துமோ— நாம
னடலை யுடலாரூர்க் காளாகியிந்த
நடலையுடல் சேராம னுன். ௰.

கலித்துறை

நானே தினன்பர் தொண் டானேனென்செப்பினு
        நன்மறவி
தானே வந்தென்னையென் செப்பவல்லான் றழல்
        வா யெழுந்த
மானே தரித்தகைக் கோனே புமைவண்டு
        வாய் மடுக்குந்
தேனே கமலைப் பதிவாழ வந்த
        சிவக்கொழுந்தே. ௰௧.

விருத்தம்

கொழுந்தழல் தொடுத்த சிங்கமும் புலியுந்
        தொடுத்தவாடையர் கமலேசர்
செழுந்தளிர் மருட்டும் பதம் பணிந்தெம்மான்
        றினந்தின முரைக்கினும் வினவார்
விழுந்தகட் புனலுமுயிர்ப்பு முடிபங்கா
        வெம்முலைத்தலத்து வேள் பகழி
யழுந்தவந்துழுத பசும் புண்வாய் வெதும்ப
        வவிர்மதிக் கனல் சொரிந்தடலே. ௰௨.

புய வகுப்பு.

அடல்வேட முன்மேவி நந்தாவ ரத்தாதி
        யண்டத்தோர் தலைசெய்தொடை யடையச் சுமந்தன

அலரோனு மன்னேனை முன்பே யளித்தோனு
மங்குற்றோர் பிறவிவாய மைவுறநின்றன
அடுகோபம் விம்மாமு ழங்காம லைத்தேறு
மந்தக்கோரு முழையுயி ரழியப் பிளந்தன
அனிவீழ மின்னார் மெலிந்தே யுளத்தொடு
மன்புற்றே தொடரவிடு பலியைக் கொணர்ந்தன
மிடல்சாய வொன்னார் புரந்தூவெழுத்தாவி
வெம்பித்திக் கொருவ வெரி கணையைத்துரந்தன
விளையாடவென்றுறைநிந்தோர் சொலக்கானில்
வெங்கட் போர் விசையனொடு மிருகப் பிணைந்தன
விரிபாடன் முன்னோர்கள் பண்பாட விற்பாணர்
விருந்தைக்கே மணிகனக மனபூவைப் பொழிந்தன
மிளிருரானன்றன் முனிந்தானெனக்கூறு
மென்சொற்பா விசையின் மிசை புளகித்தெழுந்தன
படர்நீல மென்மாலை பொன்பா விதழ்க்கோதை
பண்புப்பா ணித்தவன மொளிரப் பொலிந்தன
படிவாசற் பொன்னுடர் கண்டோ மனப்போது
பந்திக்கா டவிசையுர் வலையத் திலிங்கின
பணியாய பைந்நாக வெங்கோன் மணித்தூய
பந்திச்சூடி கையிலுல கிருளைக் கடிந்தன
பனிவீச மின்வீசு வெண்பூ விளைத்தோடு
பைம்பொற்கோ டியர்மதிய நிகரக் கிடந்தன
கடலூடு விண்ணோர் கரிந்தேவிழக் கடுங்
கங்குற்போலெழுகொடிய கடுவைக் கவர்ந்தன
கருதாத முன்னூலர் செந்தீ யிடைப் பூமி
கம்பித்தே வருமறியை மழுவைப் புனைந்தன
கரைமோது தண்ணீர் விசும்போர்ப் பணித்தோடு
கம்பைக்கே மலையமுது தழுவக்குழைந்தன
கமலேசர் வன்மீகர் சிங்காதனத்தியாகர்
காம்பிக்கா தழகருயர் கனக புயங்களே ௫௬.

## விருத்தம்.

புயங்கால் சிரத்தொடு கண்ணாயிரங்கொண்ட
புனிதப் பிரான்
வயங்கார் மலர்க்கோதை பணிசெய்யு மாரூரின்
மட நாரைகா
ளியங்கார் செயக்கோதை நடமாடுகார்கால
மெமரெண்ணிலார்
தயங்காரழற் போலு முரைபட்ட துளைபட்ட
தண்ணாரோ ௰௪.

தண்ணார்ப் படர்தசங்கம் வெண்டுணைக் கமலாலை
தவழா வெள்ள
முண்ணுமெண் ணைவற் றடங்கா நினைதாரூர்ப் புகழ் நாரே
முரைப்பதல்லான்
மண்ணுவார் பொய்ப் புகழை மறந்துமுரையாது
வைப்பாய் வதனமூன்று
கண்ணுதேவரகண்டாவீதிவிடங்கா கம்பிக்
காதிணனே ௰௫.

காதிமகன் பெண்கோறல் கண்டெங் கௌசலைபோல்
லோதிமகன் கொல்லானுலக மென்கொல் காப்பமைத்தீ
ராதி மகன் போற்று திருவாரூரீர் சோதி மக
வீதிமக நாக மனெரித்து முறைசெய்தானே ௰௬.

## விருத்தம்.

செய்யிருந்தநெற்போ ருரிஞ்சியவடுத்
தெண்ணிலா வுமிழ்திங்கள்
மெய்யிருந்த வாரூரார் சோணாட்டினமன்
கொடிவிடத்தொடு
மையிருந்த கண்ணையும் மூலைக்கொங்கையு
மறைவழிப்படர் நூல்போற்
பொய்யிருந்த நுண் ணிடையையுமுடையதென்
புத்தியிற்பொன்மானே ௰௭.

பொன்னங்குடுமி வரை குழைத்துப் புரந்தியூட்டும்
புரிசடையா
ரன்னம் பயிலும் வயலாரூ ரடிசூட்கொருநா
ளணில் காணா
வண்ணம் படு மெய்ப்பசப்பும் விழிவழியூற்றிருந்து
பொழிபுனலுந்
தன்னந்தனியுந் தனிப்பேர்ந்துசாற்றீர்
துயரமாற்றீரே ௰௮.

ஆற்றிடைச் செல்லுமுக்கோ
லசை நடையந்தணீர்பூந்
தாற்றிடை யரம்பை யாரூர்த்
தாணுவைப் பிரியார்போலக்
கூற்றிடைவிழியிமேனுடுங்
குருதிகொப்பளிக்கும் வேலான்
றேற்றிடைப் புரவார் பாலைசெல்லுமோ
சொல்லுவீரே ௰௯.

கொல்சுனை நீலமுங் காந்தளுஞ் சுந்தர
முத்தமும் வேய்களும்
வெல் சுடர் மாமணிக் குன்றமும்மேகமு
மெங்கணு மேவுமால்
பல்சுரர்சூழ் கயிலைப்பிரான் பங்குறை
கொற்றவை பற்றதாம்
செல்சுரமென்னு குறிஞ்சிவாய்ச்சென்றன
மோவிறற்பாகனே ௨௰.

பாகினைச் சுவைகற்பித்த பணிமொழியவர்
பொன்பூவென்
றாகிய வேணவா மூன்றகற்றி யாட்கொள்வ தென்றோ
கோகிலச் சோலையாரூர்க் குளிர்நிலா வுமிழுங்கூனல்
நாகிளந் திங்கட்கண்ணு நதிபொதி சடையினானே ௨௧.

சடைமத்தத் தொடுதுத்தித் தருகட் கட் செவியார்
புடைநெற்றி னக்கமலைச் செய்புனலிச் சைக் குருகீர்

தொடைமுத்துப்பொருவக் கட் டெளிமுத்துப்
புனைவெண்
படை புக்குத் தலைவாக்கிப் படைச்செப்பிடுமே உஉ.

கலித்துறை.

செப்பத் தொலைவில் புகழ்க் காமேச நின்சேவடிசேர்
நப்பத்துடைய வடியா றுறவன்றி நாளுமொன்றி
முப்பத்து மூன்றறஞ் செய்வர்புகுது முதற்பதங்க
ளப்பத் தொருங்குபெறினு மதற்குப் பரிவிலனே உ௩.

விருத்தம்

பரிவிலார் திரிபுரமு நீறுசெய் பவளமேனியனார்
கரியமால் சிரமறுத்தோ டொளமு கமலைமானனையாய்
தெரிவிலா விறைகுடியை நோவுசெய்செயலினாறியதால்
வரிகொளோ ழிசையரி மதர்சல
மலர் கொன் மாசினையே உச.

பிச்சியார்

மாசுபடு தலைகெடுநூற் சமயபேத
மதங்களுந்தென் ளுரர் வருத்தவாறு
தேசுபெறு சமையத்தி னென்றேயாகத்
திருவுளத்திலெண்ணியோ தெருவே வந்தார்
நாசியெனுங்குமிழார்மெய்ச் சண்பகத்தார்
நறைவாய்ச் செங்குமுதத்தார் நல்லோ ரெல்லாம்
பேசுமுகத் தாமரையார் விழிநீலத்தார்
பிறங்கு நகைமுல்லை யார் பிச்சியாரே உரு.

வெண்பா

ஆரேயென் போல்மய லாற்றுவார் பெண்பழியு
நேரோ வராமனிணைத்திடீயே—ஆரேவெண்
சோதி விடங்கா சுடர்விடங்கா வாரூரில்
வீதி விடங்கா மிக உசு.

விருத்தம்

மிகத்தமிழ்க்குத் திருவுள்ளமகிழுமாரூர்
வீரசிங்கா தனத்தியாக விநோத கேளாய்

சகத்தருநா ளறியினும்பெண் ணறிவுபேதைத்
தன்மைத்தா மென்னுமொழி சரதமாமால்
மகத்தாரும் புரத்தடுமை யம்பாமாரன்
மாயவடிவம் மறிந்தான் வளர்பூங் கோயி
லகத்தடிமை யாம்பரவை பொய்வேடத்தை
யறியாமற் போமெனச்சொல் லாடினளே ௨௭.

கலிப்பா

நாளொன்றுபோது நகைமுடிவிண்
ணோர்மணிப்பூந்
தோளொன்றுந் தோய்ந்துசருநியகந்
தெய்து மென்பார்
கோளொன்று நீங்கா வென்னெஞ்சு
குடி கொண்டதென்னே
வாளொன்றுபார்வை கொண்டார்வன்மீகர்
பொற்பதமே ௨௮.

விருத்தம்

பொற்றருவிழுது விட்டனையபூஞ் சடைக்
கற்றருசி லையினார்கமலை மாதரார்
முற்றரு குணமிலர் முத்தமீ கிலர்
சொற்றரு கிலரிவர் யாவர் சூழிலே ௨௯.

கலித்துறை.

சூழப்பெற்றே முயர் பூங்கோயிலை
முறைசூழ்ந்து முன்பு
தாழப்பெற்றேந் திருவாரூர்க் கடவுளைச்சந்தித்திருள்
போழப் பெற்றே மெய்ம்மையன்பினரோடு
பொருந்தியிங்கு
வாழப் பெற்றேமிகழ்ந்தோம் சுவர்க் காதியில்
வாழ் வினையே ௩௰.

விருத்தம்.

வாழ்வை யெமக்கருளீசர் மலைத்திரு
மாதொரு பக்கமுளார்

சூழ்வயலிற் கயல் வாவு மலர்ப்பொழில்
சூழ் கமலைக்குறுகே
தாழ்வுதரத்தனி போய்வரல் சொற்றவர்
தாம்வரல் பொய்த்தனரால்
வீழ்வது பொற்கலை வீழ்வது கட்புனல்
வீழ்வது கைத்தொடியே ௩௧.

தொடிப்பது மத்தக்கிரியுமொளிப்பேமேழு
சூழ்கடலுஞ் சிங்கத்திற் சுருங்கவேற்பே
முடிப்பது மன்னன வுலகம் படைப்போம் வேறு
முற்றுமிவை வித்தையோ மொழியக்கேளீ
ரடிப்பதுமஞ் சிவப்பவொரு பாவைவாசற்
கன்று சென்ற முதல் வன்ன லமரர்காணக்
கடிப்பதுமவிதி நிறுத்ததிருவாரூர்க்கே
கல்லாதாரொருவரையாங் காட்டுவோமே ௩௨.

கலிப்பா.

காட்டுசீர் மறைநாலும் பணிந்தவூர்
கமலமாது தவப்பேறு கண்டவூர்
கீட்டுசீர் மறுமைமந்தனை யூர்ந்தவூர்
தீர்த்த மூன்றரைக்கோடியுஞ் சேர்ந்தவூர்
நாட்டுசீர்த்தமிழ் மேன்மை படைத்தவூர்
நான்முகத்தனி றுத்திசை கண்டவூ
ரூட்டு சீர்த்தடப்பூவற் புதத்தினா
ருமைமணாள னூரூர் முதலூரதே ௩௩.

விருத்தம்.

ஊரன்விழி பொற்கனகம் போலொருமா
முனிவன கைபோலேழ்
பாரன் மகப் போலிவளிழந்த
பைம் பூணளித்தவெளிதன்றோ
சேரன் செய்யுட்டமிழ்க் கோவைச்
செவியாபரணகடகக்கை
வீரவாரூர்ப் பெருமானே
வீதி விடங்கப் பெருமானே ௩௪.

மாளாத வினையுடையார் பணியாதவாரூரர்
 மாதா வின்ற
தோளாத மணிநகையுந் தளர்ந்தனள்
 வீழ்ந் ததுமேல்பாற் சுடரு மிப்பாற்
றுளாதே குவதரிது மறைப்பாலுண்டெங்கு ரம்பைத்
 தங்கிச் செல்வாய்
ஆளாக்கிக் கொடுங்கூற்றங் கொலைகற்கப்
 பயிற்றிய கூரயிலி ஞனே ௩௫.

ஆய்ச்சியார்.

அயில்கொண்டவிழிப்பாக ராரூர் வீதி
 யாய்ச்சியார் செம்பவளவாய்ச்சியாரே
செயிர்கொண்ட பகைபலநுங் குலப் பேர்கொண்ட
 சிறுமருங்கு லிறிற் பிழைக்குஞ்செயல்வேறுண்டோ
தயிர்கொண்ட வொரு குடத்தை யயலே வையுந்
 தண்ணமுதங் கொண்டுபெருந் தவத்தோர்தங்க
ளுயிர்கொண்டவிருகுடத்தை யென்மேல்வையு
 மயலாமுலக மையல் செய்யலாமே ௩௬.

செய்சுடி கைமணி விளக்காற்
 றிக்கினிருள் சீத்தாடு பணி
யையர் பிறந்தார் பிறவாத வாரூ
 ரடைந்தார்க் கடையாவே
வெய்யகயவாயற்ற கோட்டு
 விரிநீச் செங்கட் பகடுருங்
கையர் பாகத்தெரிகுஞ்சிக்
 கரியமேனிக் கடுங்கூற்றே ௩௭.

கலித்துறை.

கடியாவண விருப்பும் புனல் சேர்வதுங் காலுண்பது
முடியானடப்பது மோர்தவமோ முறையால் வணங்கிப்
படியாதரிக்கின்ற வாரூர்ப் பிராற்குப் பணிபுரியு
மடியாரடியவர்க் காட் செய்வதே தவமாவதுவே ௩௮.

## விருத்தம்.

ஆவது மெழுபிறப் படைந்து மண்ணதாய்ப்
போவதுந் தவிர்ந்து சீர் பொருந்தவேண்டுவோர்
காவருமலர் வயற்கமலைமேவிய
தேவரகண்டரைச் சிந்திப்பார்களே ௩௯.

களையாய நறுநீல மதுமோது
வயல்மேவு கமலேசனூர்
வளையாத வொருகோலின் மநுநீதி
புரிசோழ வளநாடதே
விளையார்கள் விழிகாணிலியல் போ
லிடுதென் பாவமெழுவாயமோ
முளையாததாயுமோலி யொருகாலும்
வளையாத முடிதாழ்வதே ௪0.

தாழாதசிறுவிதியு நெய்யாச் செம்பொற்
றூணமான் முதலோருந் தழல்வேள்விக்கே
வாழாது முனிந்துமருள் கொடுத்தவாரூர்
வள்ளலார் செவ்வந்தி மாலைதாரார்
வீழாத வன்பினர் தாம்போற் செல்வம் வேண்டினருக்
களிப்பது போன் மிளிர்பூங்கோதைக்
கேழாரு முகமலர்க்குமுலை நேமிக்குங்
கிளர்புன லீந்தது நயனக்கெண்டைதானே ௪௧.

கெண்டைவிழி முத்தரும்பச்சாளரவா
சலிற் டணிந்தேன் கிள்ளை நாளுந்
சண்டைசெய மதன்கொடுங்கோல் விலக்குமென
முறையிடுதல் சற்றுங்கேளீர்
பண்டை மநுநெறிபுரிந்தவாரூரிற்
செங்கை மழுப்படை போதாமற்
கண்டையமுங் கொண்டரியாசனத்திருந்தெப்
படி புவனங்காக்குமாறே. ௪௨.

### கலிப்பா.

ஆறுகொண்ட சடையாரூ
ராதி கொன்றைத்தாரதுமின்னே
நீறுகொண்ட மெய்யடிய
ராகிக்கொளவும் பொறுப்பாரோ
மாறுகொண்ட நாளொரு பூ
வங்கெடுத்தமாதொருத்தி
வீறுகொண்ட நாசி கரம்
வேறுக்கிவிட்டாரோ சங

### கலித்துறை.

விட்டாரிலங்கையின் றலைவனைப் பாட
விரும்பிக் கண்ணுற்
சுட்டார்மதனைப் புரவா ணரையரி
சோரிகொண்டார்
மட்டார் குவளைவயற் கமலேசர்
வளைபல்விற்குஞ்
செட்டார் மதுரைபுரந்தார் பொன்னுடெனத்
தென்னிலமே சச

### விருத்தம்.

தென்மலைத் தமிழாரூர்த் தியாகரென்பது தான்வீரே
பொன்மலை போலுங் கோயிற் பூவைய ரெண்ணிலாரின்
மின்மலை மருங்குலாரோர் மெல்லியல் வீதிதோறு
நென்மலை கொள்வீரென்ன நிறைமுரசறைவித்தாளேசரு

வித்தாகி யொருமூன்று முதலான வாரூரர்
மேவார்கள் போற்
பித்தாகி நான்வா டுறப்போயி னரோதா
பிறங்காழியூர்
முத்தார் சுவட்டெல்லை தாராதிருப்பாய்
முனைக்குந்தலைப்
பத்தார் பறைக்கொண்டல் கைச்சங்கெனச்சங்கு
படுபௌவமே சசு.

பௌவத்தொலிபோல் மறைபரவப்
பாவையனையார் நடமாடச்
சைவத் தவர்பின் னின்று விண்ணோர்
தடங்கை கூப்பக் கருவிமுறை
பைவர்க்கம் முன் னின்றியம்ப விருந்
தந்திக் காப்புக்கொண்டருளுந்
தெய்வப்பெருமா னணியாரூர்
சேரார்பிறவிதீராரே சஎ.

கலித்துறை.

தீராத நதிர் நாவாலிருண் மேயுமணிமவுலித்
தேவர்நாணும
லாராத காதல் புரிபரம்பொருளார் விழாவரு
வாரூர்போல்வா
யாருஞ் செய்யாத பூம்பாவை நானையுனக்
கீவர் பாறுங்
நாராருங் கொடியு முணப்பகை நாழி
லாடிய வேற்கனவிறைரே சஅ.

சிந்து விருத்தம்.

மனங்கொடுத்த நீலகண்ட ராரூரர்க்குக்
கனகமடிக் காயிரமுங் கொடுக்கமேருத்
தனங்கொடுத்த வெட்டவெளிச்சித்தரப்பா
தரணியிற் போய்ச் சிறிதேனுஞ் சாற்றமாட்டே
மனங்கொடுத்த மணியொன்று விண்ணோர்க்கீந்தோம்
வயிற்றெரிவால் வித்தையெல்லாமறந்து போனோ
மனங்கொடுத்து நம்பசியைத் தணிக்கவல்லார்க்
கட்டமா சித்தியு நா மருளுவோமே சகூ.

அகவல்.

அரும்பொற் கலத்திலாரமு தருந்தினர்
கருங்கலவோட்டிற் காடியேற்றுண்ணவும்
பழுதில் பொன்னந்துகில் பன்முறையுடுத்தோ
ரிழையிழைபவிழ்துகி லிசைத்திசைத்துடுக்கவும்

பளிதச்சாந்தம் பன்னீரணிந்தோர்
வெளிமட்பூழி வேர்வையிற்பூசவுந்
தந்தக் கட்டிலிற்றளிரிணைத்துயின் றோர்
சந்தியம்பலத்திற் றடங்கையிற்றுயிலவு
மதக்கரிநெடுந்தேர் வாம்பரியூர்ந்தோர்
பதத்தழற்பாலை பாற்றனிச் செல்லவு
முரசு மூன்றிரட்டு முழுமணிமுன்றி
லுரைசெய்முட்டுரு வோரிகூண்டொலிப்பவு
மொற்றைவெண்குடை யரசுறுமத்தாணி
முற்றெருக்கெழுந்து முதுமுரம்பாகவுங்
கண்டுமானிடர் காமுறுசெல்வ
முண்டெனக்கருதுவ தொழி நீ மனனே
யாலத்தானயன னந்தகோடியர் பணி
மூலத்தான் முழுமுதல் மூர்த்தி
வரகவி பொருத்தியை மணப்பப் பதியிலார்
தெருவெலா மணப்பச்செய்தோன்
கண்ணிமை பொருந்திலுங்கடவுணேர்
தொண்டரெண்ணில ரிருக்குங்காவணத்
திறையனடிக்காயிரம் பொன்னரும்பரிசருளிக்
கோடிக்கு மப்பெயர் கொடுத்திடும் வள்ள
லாரூர்க் கடவுளவனே
தீராச் செல்வத் திருவுடையானே ௫௰.

### விருத்தம்.

ஆனேறுமாலாரூர் பூமியுளக்
கமலமா மாரூர்க் கோதை
தேனேறு மொழிக்குதலை தெளிந்ததிலை
முளைத்ததிலைச்செவ்வாய் முத்த
மீனேறுகடல் விடம்போற் கொலைகற்ற
திலைமாழை விழியுமெவ்வா
றானேறுகுறி வெள்வேலுழவ விலண்மாட்
டென்சொ லுரைக்குமாறே ௫௧.

### கலிப்பா.

உரைத்தபொற்றரு நாட்டினும் வீறுமாரூர்
காவிரி நாட்டினுள்ளோங்கியே
தரைத்தலத்திடர் தீரப்பொன்னங் கனிதந்துளார்
சொற்றமிழ்க் கோதைகோதையார்
நிறைத்த மூன்றுகோளாறுபுராணர் மெய்
நீக்கலக் கொடியார் கொடியாரளி
யிறைத்த மென்குழலாரளியில் லவர்க்கில்லையேல்
வைய மெவ்வண்ண முய்வதே (நிஉ.)

### விருத்தம்

உய்யானமிமைப்பிலர் தாருவினேனுங்குமாரூர
மையார்களாரே சேவடிசேர் முடிவள்ளல்மீகண்மோ
செய்யாளிடை சொன்மதுரமூலைசேர் குணங்கள்
கையாலெழுதித்தரின் நீகலைக் கல்வியானே (நிரு.)

### பாண் கலித்துறை

கல்லாத செல்வக் கயவர் தங்காவற் கடுங்கடைகள்
பல்லாயிரந்திரிந்தாவதென் பாணமுன் பாணனேயோ
ரல்லார் பொழு தினமைத்தான் கமலை யமலனல்லால்
வல்லார் தம் பாடலறிந்தார் கொடுப்பவர்
மாநிலத்தே (நிச.)

### கலிப்பா

மானையணிந்த செங்கைவள்ளலை யாரூரயன்மால்
கோனையடிபணிந்த கோதையை நீவாட்டுதிபாற்
கானைவிரிகுமுதக்கையார் மறந்தனேயோ
தானைய மார்படு தக்கன்வேள்விச்சமரே (நிநி.)

### விருத்தம்

சமரநாடிக் கலக்காபீழையின்றிச்
சாற்றிலயன்மால் பதமுந்தருவதாய்ப்
பமரநாடித்தழக் கமலர் தூக்கின்வீறாய்
பத்தரொன்றும் வெண்டாரைப் பரிதலாமே

குமரநாடகவடிவக்குரிசிலொடும்
குருப்பை முலைவார் தருபூங்குழலாளொடு
மமரர் நாடாளாதேயாரூராண்ட
தகிசயமோ வந்திக்காப்பழகனுரே ருக.

**கலிப்பா**

அழகுக் காருமொவ்வா ரருமைத் தேவர்பிரான்
கழகத்தாரொலி கூர் கமலைக்காவலனூர்
பழகிக் கூறியசூள்பழுதுற் றேகினர் போற்
குழகக் கோகிலமே கொடிதிற் கூவுதியே ருள.

**விருத்தம்**

உதியாத தமிழ்மாலை புனை கமலைப்சேர்க்கோரறிவின்மா
மறை நாமத்தோரின் முன்னோர்
விதியெழுத்துத்தீர்ந்த பொருள் மேனி வில்லு
விளங்கு மதிச்சடையான் விமலனூர்க்குப்
பதியனந்தநதியனந்தம் பொன்னனந்தம் படையனந்தங்
கொடையனந்தம் பணிந்தோர்க்கீயுங்
கதியனந்தநிதியனந்தம் வடிவனந்தங் காவனந்தம்
பாவனந்தங் கருதுங்காலே ருஅ.

**வலைச்சியார் விருத்தம்**

கருவாரா தடியேனையாண்டநீல
கண்டதே வரகண்டர் கருத்தாலென்று
மருவாரயுருவாரயெல்லா மான
வண்ணலார் தேரூரு மாரூர் தன்னில்
வெருவாரவிடைமேவிய முலைக்குன்றேந்தி
மீன்விற்கும் வலைவாணர் மெல்லியலாருக்
கொருவாரற் புகழ்வொண்ணு விருவாரற்கு
முயிருண்ணுங் கயற்கும் விலைபுரைக்கொணுதே ருகூ.

**கலிப்பா**

ஒண்ணுதலிபாகர் மறையோது திருவாரூர்
வண்ணமுறு சித்திரமு மாதரொனிணுடன்

றிண்ணமிது சேரியரை யாரறிவர் மின்னே
பெண்ணமுதமேயடியனேனுடன் பிணக்கே ௩௰.

### மடம் விருத்தம்

பிணங்குசமயமெவைக்குங் கடவுளானோர்ப்
பெருமாற்குக் கண்கொடுத்த பெருங்குலத்தோம்
அணங்குமணம் பேசவந்தமன்னர் தூதாவ
கூற்றங்கணையென்பதறியாய் கொல்லோ
வணங்குவிசையற்கரிய கணை யொன்றீந்தோ
மாதரெண்ணீராயிரவரை வதுவை செய்தே
மிணங்குதுவரைக்கரச னெமைப்பெண் கேட்டே
யெங்கணையொன்றால் வானமெய்தினனே ௩௰௧.

### கோற்றியார் விருத்தம்

எய்துமாலானோர்தம்மை
யிறைஞ்சுவீ ரென்பார் மென்பூப்
பெய்து மாலானோரெல்லாம்
பெருகவே பணிய வந்தீ
ருய்து மாலென்று விண்ணோ
ருடனிசை கூறி யன்பு
செய்து மால்பணியு மானூர்ச்
சிற்றிடைக் கொற்றியாரே. ௩௰௨.

### கலிப்பா

கொற்றுறைவேல் கொள்முசுகுந்தன்
மநுவாதியராங்
கற்றூர்பணி தென்கமலையர்
பூணுமெனவோ
மற்றூ ரூருமொவ்வாத மாலை
யோரு சூலத்தார்
சொற்றூர்கொண்டார் பாரந்தீர்த்தார்
வண்சேடனுக்கே. ௩௰௩.

### தாழிசை

கோடுகொண்ட கோளாந்தர்
குடையுநந்தி நான்முகன்
செங்கைகொண்ட கருவியுந்
தியாகரென்ற சின்னமும்
வீடுகொண்ட பேர்வணங்கு
நடனமும் பொன்மாரியும்
விலக்கியூரர் தூதுபோன
விமலர் மேவுகமலையார்
ஏடுகொண்ட வோதியு
மிராகதேகசோதியு
மிரத்தினமுத்துமாலைகொண்ட
யானையும் பணிப்பிரா
ஞடுகொண்ட மணியிழைத்த
தோடுகொண்டவள்ளையு
நஞ்சுகொண்டவிழியு மென்றென் னெஞ்சு
கொண்டு போனதே. கூச.

### கலிப்பா

போனவினையினை ரோது கமலையர்
பூவையுமையொரு பாகனுர்
பானலணி திருமாலை தருகிலர்
பாவையுயிரினிவாழுமோ
கூனலிளமதி பாவியா வெழு
கோடியுகமயலார் போலா
மீனவதிர் கொடியாடவடுகணை
வீரமதனமராடுமே. கூரு.

### விருத்தம்

ஆட்டுதொறுந் தொறுமது நாவாயிரத்தா
லயில்கமலைத்தியாகேசரடியைப் போற்றித்

நீட்டுபுகழ் பெறுகளிபேஞ் சத்திபூசைசெய்து
மதுத்தசை யருந்தார் சித்திசேரார்
கோட்டுமுலைமது நாமம்விண்ணோர் கொண்டார்
கொழுந்தகையின் பெருமை மறைகூறக்கேளீர்
வெட்டுமகம்பலவினுமுண்டசையவாலாலமேற்றெனும்பு
கைக்கொண்டாரென் விண்ணில் வேந்தே. கசு.

வேந்தரிருவொண்டோளி கறனும்
வீரமவுலி நறுமாலை
மோந்தகழற் கால்வள்ளல் பொருள்
முற்றிதன் முன்னினையேல்
சாந்தமுண்ணும் பூந்தோட்டுத்
தண்ணாரூரர் சாத்தாதி
வாய்ந்தவுயிரைத் தருமலையின்
மருந்தங்குணர்ந்து வருவாயே. கஎ.

வருமினளிவரி புரியவெதிருமிழ்
மதுவினி தழியின் மாலையர்
கரியையுரிசெய்த விறைவர்மறை பயில்
கமலை மலருமேவிலார்
கரியும் வரிவளையினமுமுறைமுறை
சரியுமிரு விழியோபடா
தெரிவையவர் நகைபுரியா ரெரிவது
தெரியுமதி யளிசேதமே. கஅ.

## கார்காலம்—பின்னடிமடக்கு.

சீதமாமுலை வனங் கணந்துங்காலந்
தீவினையேன் முலைவனங்கணந்துங்கால
மாதரலர்மென்மை கரையுங்காலம்
வருநீர்க்கணலர் மென்மை கரையுங்காலம்
வேதநாரணன் பரவுந்தியாகராசர்
வீதிவிடங்கப் பெருமான் விளங்கு மாரூர்க்

காதலாம்பிரிவானம் பொழியுங்காலங்
கருவானம் பெருவானம் பொழியுங்காலம். ௬௬.

காலனு ருயிரளித்த கருணை வாரிதியே வேத
மூல நாயகமே பொன்னே முத்தமே பவளக்குன்றே
யால நாவயின்ற வாரு ரமுதமே யென்னுதன்னே
சாலநாட் கழித்தபாவிக் கென்கொலோ சாருமாறே ௭௰.

கலித்துறை.

சாரார்புறங் கடந்தார் கயிலேசர் தடங்கடல் வாய்க்
காராரு நஞ்சுண் டிருந்தார் வியப்பென்பர் கட்டுரையார்
நீராதென் மெய்மை யுருக்கு நிலாவென் னுந்
[தீக் கொழுந்தை
யோராச கோரங்க ளுண்டிறவாம விருப்பவனே ௭௧.

தாழிசை.

பனகவுச்சியுலகில்வீறு
பட நிறுத்த வெல்லையும்
பரவைகேள்வர் நதியிவிட்ட
பைம் பொனூற்றவாவியுந்
தினகரன் பொன்னுடியான்
தெய்வவாழியிர தமுஞ்
செய்யகின் கிளிப் பதமுஞ்
சிவந்த நீதி வீதியும்
அளகமுற்றதேவர்மேவு
காவணத்தின் மேன்மையு
மயனுமாலுமாலை தோறு
மடி வணங்கு கோயிலுங்
கனகரத்தின வரியணைத்
தியாகராசர்வடிவமுங்
காணமாதவஞ் செய்யாத
கண்களென்ன கண்களே ௭௨.

### கலித்துறை.

கண்ணுடற் பாவை யாரூர்க்
காயொளி கவிழ்க்கும் வேலோய்
தண்ணுடைக் கோதை வேண்டிக்
கங்குல் நீசார்வதென் கொல்
பெண்ணுடற் பாகனூர்ப்
பெருந்தகை கைலைபோலுந்
திண்ணுடற்சீய வேறு
திரிமதக் கோவினமே. ௭௩.

### விருத்தம்.

எதேதென்பர் பிழைசெயினு
மிம்மை மறுமைப்பலன் கொடுக்குங்
காதே குழையா ராரூரர்
கழுநீர் மாலைதாராரேல்
நீதேர்குவ தொன்றில்லை யிந்த
நீதியாற் றுயில்கொண் டணைவாயேல்
மாதே யென்பா லவர் கனவில்
வருவா ரின்பந் தருவாரூர் ௭௪.

### கலிப்பா.

தருவாரூர்தியில் வந்தே தக்கன் வரமெனப்பிறவி
யொருவாரூர் தொறு முழன்றதனாற் பயனுண்டோ
மருவாரூரர வணிவார் வன்மீகம் பணிமனமே
திருவாரூ ரறியாதார் சிவலோக மறியாரே ௭௫.

### கலித்துறை.

அறியார் புனைகின்ற காமர்வில்லை யருளா ரிவள்மால்
குறியாரெனச் சொலப்போனா லறிவரெனக்கூறுவரோ
முறியா நறுமலர் தூவி விண்ணுடர் முடிபணிவார்
மறியார் கரத்தைய ராரூரர் நாளுமத னெய்தலை ௭௬.

## மாதங்கி விருத்தம்.

நெய்வாளுங் கொடுமாழு முடைய சீற்ற
　　நிருதரிறைக்கிராவணனு நெடியபேரு
மொய்வாளு மாருயிருந் தந்தவாரூர்
　　முத்தனூர் புகழ்பாடு மாதங்கி
மெய் வாளுங் கைவாளும் மைவாட் கொண்ட
　　விழிவாளுங் கண்டுருகி மெலிந்தோர் தம்மேற்
கைவாளும் பகழியுமா வினிற் கொள்காமன்
　　கடிவாளி பொழிந்திளைத்தான் காயந்தானே எஎ.

## தூது விருத்தம்.

காயமீனெனப்பூத்தபூம் பொய்கையிற்
　　கம்புளேயன்னங்காள்
நேயமீனுநாரைகா ளொரு மொழி
　　நீர்சொலிற் பிழையுண்டோ
மாயமீன் விழி மணியணி கமலையெம்
　　வள்ளலார் வினவாரால்
மேயமீன விழி முத்தணிபொன்னென
　　மெய்நிறந்திரிந்தேனே　　　　எஅ.

## அடிமடக்கு—தாழிசை.

திரியுமலைவாய்ச்சங்கமே
　　செம்பொன்மலைவாய்ச் சங்கமே
திரையின்பாட்டுச் செவ்வழியே
　　தீக்கும் பாட்டுச் செவ்வழியே
விரியுநிறம்பாலோதனமே
　　மேவாதென்பாலோதனமே
வெண்பூங்கண்டன்மாலையே
　　விரும்பேன்கண்டன் மாலையே
புரியவெம்பாகுவலையமே
　　புரைக்கும்பாகு வலையமே

யோடும் பண்டநிறைகலமே
யுடையேன் பண்டநிறைகலமே
யரியவாவியளியீரே
யறு மெனுவியளியீரே
யாராமாரூர் வள்ளலையே
யழையீராரூர்வள்ளலையே எகூ.

மருட்பா.

வள்ளமுலைச் சாந்தம் புலருமதிவெயர்க்கு
மெள்ளரியநீல மிமைக்குமா-ளுளமே
பாரிடைப் படையாரூரர்
தேரிடமாகுமித் தேன்மொழியிடமே அ0.

கலித்துறை.

இடங்கொண்டமாதினராரூரர் நாட்டிறையேகெற்புக்
கடன்கொண்டவளவர் வேகறை நீபலிகைத்தருவன்
விடங்கொண்டகண்ணமனூர வெதிருமின்பகையே
வடங் கொண்ட கொங்கைமுன்னுள் கொடியேயெம்
மணிக்கொடியே அக.

விருத்தம்.

கொடிவிடையவர் குறு கலா நடையூர
பொடி படமுனிவர் பொலி கமலையின்வா
யடியவர் துதி செயு மாகர வொலியரா
படிமிசை யவரிவர் பழ வினையறுமே அஉ.

அறந்தவாதருளாழிமாலிந்திர
னலயத்தினமாரூர் சிறந்ததா
மென வந்தசிங்காதனத்
தியாகரைப் பணியாதார்
பிறந்த மேற்குல வேதியராயினும்
பெருமதுக் குடித்தெல்லா
மறந்தபாதகரே யவரிம்மையு
மிலர்தாமே அங.

### வெண்பா

இலவ விதழ்க்காம விடர்க்கொன் றுரைப்பன்
மலர்வனஞ் சூழுங் கமலைவள்ளல்-கலவமயில்
கோடல்வேள் வந்தவிழி கும்பிட்டா லுய்யுமோ
ஆடல் வேள் செய்யுமமர் அச.

### வஞ்சித்துறை

அமரர்மாமுடி-விமலமாமணி
கமலை நாயகர்-தமது பாதமே அரு.

### வஞ்சிப்பா.

பாதமோது பழவடியவ
ரேதமேதுமிலருள் பவர்
சொற்றவானோர் தொகுசிதலையின்
புற்றின்மேவு புரிசடையவ
ரறைபணையொடு மதிகரிபரி
மறைகறங்கொலி மறையாரூ
ருறையுந்திருவடியாரடிசேர்து
மிருவினை நீங்கியின்பம் யாமுறவே. அசு

### குறம் விருத்தம்

முறத்தினிறை நெற்கொடுவா கைகாட்டம்மே
பல்லி மொழிநன் றன்பா
வுறத்திருவாரூர்ப் பெருமான் வருவாரெங்கள்
குறிபொய்யா துறைப்பக்கேளாய்
திறத்தின் மரைமேற்றைப் பயந்தோன் குறிகற்பா
னெங்குலத்திற் சேர்ந்தான் சேயோன்
குறத்திகுறிவழி செல்லலா
வுத்தமவேதியனென்றே கூறுவீரே. அஎ

### வெண்பா.

கூறிவாயான் விடுத்தகொண்டல் வாத்தாழ்த்ததென்கொ
லாறிவருஞ்செஞ்சடையாராரூ—ரேறுகைவா

ராடேந்திக் கூத்தர்க் கருள்புரிமால்காணுதா
ராடுந்திக் கூத்தர்க் கவா. அஅ

### கலிப்பா.

வாவும் விடையாரூர் வள்ளலருளில்லாருக்கி
யாவுங்கொடுப்பவருமில்லை யவ்வளவோ
மேவுஞ்சிந்தாமணியும் வெம்பாலாம் வேலாமைங்
காவுந்தருபசுவுங் கற்பசுவாங்கண்டீரே. அகூ

### கலித்தாழிசை.

ஈரால்விழியால மெய்த்தினேன் மடநாராய்
சீராரும் போதாவே செங்கால் வெண்குருகே
தாராநாட்டொளி பூத்த கடுக்கை நறுத்துளி தூங்கும்
வாராருஞ்சடையார்க் கென் னைபல் நீர்மொழியீரே. கூ0

### கலித்துறை.

மொழிமுத்தமிழொலியாரூரவோ பின்முருகமையப்
பொழிமுத்தக்கா விடைநீதந்த மாந்தழை பூந்துகிலுங்
கழிமுத்த மாலையும்பூணுங் கலையுங்கனக மெய்யும்
விழிமுத்தமேவலிற் சாபசப்பூந்தழைமின்னினுக்கேகூக

### விருத்தம்.

மின்னாட்டுஞ்சுடர் மழுவான் வீதிவிடங்கப் பெருமான்
விளங்குமாரூர்
மண்ணாட்டி லதிகமெனச் சோணாட்டிலாரூரில்
வந்தாரென்று
விந் நாட்டிவிவ்வூரிலெய்தாமற்றவந்தான
மியற்றியந்தப்
பொன்னாட்டிற் புகநினையும் பூரியர்
பேதைமையை யெவர் போக்குவாரே கூஉ.

### கலித்துறை.

போகத்துமையவள் காணுங் கொடுகட்டிப்
[பொற் பிடைத்தி
யாகக் கடவுள் கமலை நண்பாவொரு சிற்றிடைமின்

மாகத்தவிர் மதிவாண் முகத்தேவிடம் வாய்த்த விழி
யோகக்கருங்கடற்கே யெனதாவி முழுக்குண்டதே கூ

விருத்தம்.

குண்டர்விழி குருடாக விழிதாம் பெற்றுங்
குளிர் புனலால்விளக் கிட்டுங் கூசாதேமுன்
கண்டவுமைப் புறமென்று மிருநாற்றாது
காரிகைபால் விடுத்துமிசை காட்டலாலே
வெண்டாள வச்சிரமா ணிக்கச் சோதி
வீரசிங்கா தனத்தியாக விநோதனாரே
யண்டமெலாந் தொண்டருமக் குண்டாலு
மாரூர்வாழ் திருத்தொண்டரதிகர் தாமே கூச

தாழிசை.

அதிகமாலேமேவி மேனிபொன்பரப்பியல்லமந்
தாழிவீழ்த ஆற்றமிக்க வலேதலேப் பொருந்தியே
புதியசோதி மணியெறிந்து கண்கணீர் நிரம்பியே
பொன்னியொத்த கன்னி கங்கை
பொன் மணக்கிலீனமோ
மதிமுகத்துமாதமேழிகைக்குவான மாதர்சீர்
மகரவீணை மறைபிஞணும் வச்ரமாட வீதியுங்
கதிசெய் தெய்வவாவியு முழக்கருத கமலையார்
கனகமாரி பொழியும் வீரகண்ட யத்தியாகரே கூரு

வெண்பா.

ஆக மலேநேரா ரக்காரி நாடகன்று
மாகமலேகோயில் கொண்டவள்ளலார்—நாகமலே
வெண்கமல மேல்முடியார் வீறடியா ரேவலற்கா
வண்கமல மேல்வாழும் மா. கூசா

விருத்தம்.

மாமகளும் வண்சணமும்மயங்கி நடம்புரி கமலே
வள்ளல் பாகத்
தேமகளுங் கிழிமையோர் தெரிவையர்க்குள்
நாணமிலார் சிலருண்டாமால்